**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**STC. No. 1/2022 PW . 7**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நடராஜன் | தந்தை/கணவர் பெயர்: | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : சார்பு ஆய்வாளர்(ஓய்வு) |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of18.03.2026

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி சார்பில் BNSS பிரிவு 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**(சாட்சியத்தின் சாட்சியம் காணொலி மூலம் பதிவு செய்யப்படுகிறது)**

**<u>18.03.2026 முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது காவல் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்று மதுரையில் வசித்து வருகிறேன். 15.10.2020ம் தேதியன்று நான் எஸ் .எஸ்.கோட்டை சார்பு ஆய்வாளராக நான் பணிபுரிந்த போது எஸ்.எஸ்.கோட்டை காவல் நிலைய குற்ற எண் 81/2019 வழக்கு கோப்பினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காயம்பட்ட காளிதாஸ் , பாண்டி , மழுவேந்தி ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சிதம்பரம் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து , காயச்சான்றிதழ் பெற்றேன் . **(மேற்படி காளிதாஸ் , பாண்டி , மழுவேந்தி ஆகியோர்களின் விபத்து பதிவேடு அ .த.சா.ஆ–7,8,9 ஆகவும் , காளிதாஸ், மதுரை வேந்தி ஆகியோர்களின் காயச்சான்றிதழ்கள் அ.த.சா.ஆ–10,11 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

2. பின்னர் காயம்பட்ட காளிதாஸ் , மழுவேந்தி ஆகியோர்களுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337, 338 ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு சமர்பித்தேன். **(அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ–12 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இத்துடன் எனது விசாரணையை முடித்து 22.11.2019ம் தேதியன்று மாறுதல் செய்யப்பட்ட சட்டப்பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். (அ.த.சா.ஆ–7,8,9,10,11 ஆகியவை அரசு தரப்பில் கு.வி.மு.ச 294 கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரி தரப்பில் ஆட்சேபணை இன்றி குறியீடு செய்யப்படுகிறது).

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

3.நான் சம்பவ இடத்திற்கு செல்லும் போது இரண்டு வாகனங்களும் அங்கு இல்லை என்றால் நான் சம்பவ இடத்திற்கே செல்லவில்லை . பார்வை மகஜர் சாட்சிகள் அ .சா.6 யிடம்

கொடுத்த வாக்குமூலத்தில் சம்பவ இடத்தை தங்களை அடையாளம் காட்ட கோரியதின் அடிப்படையில் தாங்கள் அடையாளம் காட்டியதாக சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லியுள்ளார். பார்வை மகஜர் , மாதிரி வரைபடத்தில் தயார் செய்யப்பட்ட தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கும் சம்பவ இடத்திற்கும் 5 கி.மீ தூரம் இருக்கும். எதிரியின் கவனக்குறைவினால் சம்பவம்நடப்பெறவில்லை என்றாலும் , அ.சா.1 அதிவேகமாக சென்று எதிரி ஓட்டிவந்த பேருந்தில் மோதியததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும்,இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.